**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII code of Criminal Procedure)**

**IN THE COURT OF PRINCIPAL DISTRICT AND SESSIONS JUDGE AT TIRUVALLUR**

**SESSIONS CASE NO. 77 / 2019**

| | |
|---|---|
| Deposition of Witness for | Prosecution PW6 |
| | Defence |
| | Court |

| | |
|---|---|
| Name | : Thiru. K. Shanmugamsundaram (I.O.) |
| Father / Husband Name | : |
| Village | : |
| Taluk | : |
| Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the day of 10th day of August, 2026.

**(A1, A2 are absent, Petition filed and allowed.)**

சாட்சி சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு அரசுத் தரப்பில் முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறார் :

**முதல் விசாரணை :**

நேரம் 12.29 மணி

நான் தற்போது தற்போது T16 நசரத்பேட்டை காவல் நிலையத்தில் சட்டம் ஒழுங்கு பிரிவில் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன். இந்த வழக்கின் புலன்விசாரணை அதிகாரி திரு.

வேல்ராஜ், உதவி ஆய்வாளர் அவர்கள் 31-10-2018 அன்று 10.00 மணிக்கு நிலைய அலுவலில் இருந்தபோது புகார்தாரர் திரு. தமிழ்வாணன் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரை பெற்று T16 நசரத்பேட்டை காவல் நிலைய குற்ற எண் 1072/2018 சட்டப்பிரிவுகள் 294(b), 353, 506(i) IPC and Sec. 3 of TNPPDL Act ன் கீழ் வழக்கு பதிவு செய்து விசாரணைக்கு எடுத்துக் கொண்டார். முதல் தகவல் அறிக்கை **அ.த.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அன்றே சம்பவயிடம் சென்று சாட்சிகளை விசாரணை செய்து சாட்சிகள் குருநாதன், தமிழ்செல்வன் ஆகியோர் முன்னிலையில் பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார்செய்துள்ளார். மாதிரி வரைபடம் **அ.த.சா.ஆ.6** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்பு பார்வை மகஜர் சாட்சிகளை தனித்தனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பின்னர் சம்பவயிடத்தில் சிதறி கிடந்த உடைந்த கண்ணாடி துண்டுகள் 5 எண்ணிக்கைகள் அதே சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றி கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்துள்ளார். கைப்பற்றுதல் மகஜர் ஏற்கனவே அ.த.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி உடைந்த கண்ணாடி துண்டுகள் 5 எண்ணிக்கைகள் **அ.சா.பொ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அதற்கான படிவம் 91 **அ.த.சா.ஆ.7** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் சம்பவயிடத்தில் மற்ற சாட்சிகளான பார்த்திபன், ரமேஷ், திருமலை ஆகியோரை தனித்தனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பின்னர் எதிரிகளை தேடி வந்த நிலையில் 31-10-2018 ஆம் தேதி சுமார் 11.30 மணிக்கு குத்தம்பாக்கம் பெங்களூர் தேசிய நெடுஞ்சாலை சந்திப்பில் வைத்து எதிரிகள் ரவீந்திரநாத் மற்றும் முருகன் ஆகியோரை கைது செய்வதற்கான காரணம் கூறி கைது செய்து அதில் எதிரி ரவீந்திரநாத் தாமாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை சாட்சிகள் ராஜேஷ்கண்ணா, சர்க்காரியா ஆகியோர் முன்னிலையில் பதிவு செய்துள்ளார். எதிரி ரவீந்திரநாத் என்பவர் பாப்பன்சத்திரம் அருகில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த தடம் எண் 202Y, பதிவெண் TN 25 N 0326 பேருந்தை எதிரி அடையாளம் காட்டி எடுத்து ஆஜர் செய்த வழக்கு சொத்தாக கருங்கல்லை அதே சாட்சிகள் முன்னிலையில்

கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றினார். மற்றொரு எதிரியான முருகன் அதே பேருந்தில் இருந்து எடுத்து ஆஜர் செய்த மற்றொரு கருங்கல்லை அதே சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றினார். 1ஆம் எதிரியின் ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி **அ.த.சா.ஆ.8** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி 1ஆம் எதிரியிடமிருந்து கைப்பற்றிய கருங்கல்லுக்கான கைப்பற்றுதல் மகஜர் **அ.த.சா.ஆ.9** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அதற்கான படிவம் 91 **அ.த.சா.ஆ.10** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 1ஆம் எதிரியிடமிருந்து கைப்பற்றப்பட்ட கருங்கல் **அ.சா.பொ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி 2ஆம் எதிரியிடமிருந்து கைப்பற்றிய கருங்கல்லுக்கான கைப்பற்றுதல் மகஜர் **அ.த.சா.ஆ.11** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அதற்கான படிவம் 91 **அ.த.சா.ஆ.12** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 2ஆம் எதிரியிடமிருந்து கைப்பற்றப்பட்ட கருங்கல் **அ.சா.பொ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகஜர் சாட்சிகளை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பின்னர் எதிரிகளை நிலையம் அழைத்து வந்து திரேக பரிசோதனை செய்து நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைக்கப்பட்டார்கள். பின்னர் எதிரிகளால் உடைக்கப்பட்ட பேருந்திருந்து தடம் எண் 202Y, பதிவெண் TN 25 N 0326 கண்ணாடி உடைந்ததற்காக சேதமதிப்பு ஆரணி பணிமனை மேலாளரிடம் சேதமதிப்பு பெற்றுள்ளார். சேதமதிப்பு சான்றிதழ் ஏற்கனே அ.த.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. பின்னர் சான்றிதழ் வழங்கிய மேலாளரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பின்னர் வழக்கு கோப்பை ஆய்வாளர் ஜெயச்சந்திரன் அவர்களிடம் மேல் விசாரணைக்காக வைத்துள்ளார். இந்த வழக்கை மேல் விசாரணைக்கு எடுத்துக்கொண்டஜெயச்சந்திரன் அவர்கள் தொடர் மருத்துவ சிகிச்சையில் இருப்பதால் இந்நீதிமன்றத்தில் ஆஜராக இயலவில்லை என தெரியவந்தது. அவருடைய கையொப்பம் எனக்கு நன்கு பரிட்சயம். அவர் இந்த வழக்கினை மேல் விசாரைணக்கு எடுத்துக்கொண்டு

சட்டப்பிரிவுககளை 294(b), 353, 506(i) IPC and Sec. 3 of TNPPDL Act @ 294(b), 353, 506(i), 341 r/w 34 of IPC and Sec. 3 of TNPPDL Act ஆக பிரிவு மாற்றம் செய்து பிரிவு மாற்றல் அறிக்கை சமர்பித்துள்ளார். பிரிவு மாற்றல் அறிக்கை **அ.த.சா.ஆ.13** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் இறுதி அறிக்கையை 15-12-2018 அன்று நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :</u>**

புகார் எந்த தேதியில் கொடுக்கப்பட்டது என்பதற்கான விவரங்கள் புகாரில் இல்லை என்றால் புகாரில் குறிப்பிட்டு இன்று 31-10-2018 என குறிப்பிட்டுள்ளார். புகார்தாரர் எந்த ஊரைச் சேர்ந்தவர் என்றோ, எந்த பணிமனையின் ஓட்டுநர் என்றோ புகாரில் கூறவில்லை என்றால் அவர் நடந்துனர் ஆவார். சேமடைந்த பேருந்து எங்கிருந்து எங்கு சென்று கொண்டிருந்தது என்று குறிப்பிட்டு புகாரில் கூறவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கில் ஓட்டுநர் தாக்கப்பட்டுள்ளார் என்றால் சரிதான். ஓட்டுநரிடம் புகார் ஏன் வாங்கவில்லை என்று எந்த ஒரு காரணமும் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். புகாரில் வாகனத்தில் ஏற்பட்ட சேதம் மற்றும் அதன் மதிப்பு குறித்து குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான். அ.சா.2 தனக்கு ஏற்பட்ட காயங்களுக்காக எந்த மருத்துவமனை சென்று சிகிச்சை எடுக்கவில்லை என்றால் சரிதான். அசா4 பணிமனை மேலாளர் அசா1 தடம் எண் 202y வண்டியை ஓட்டினார் என்று குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரியல்ல. ஆவணங்கள் சமர்பிக்கப்பட்டுள்ளது. பேருந்திற்கு ஏற்பட்ட சேதாரத்திற்கு மோட்டார் வாகன ஆய்வாளரிடமிருந்து சான்று வாங்கி சமர்பிக்கவில்லை என்றால் சரிதான். சம்பவயிடம் சென்னை பெங்களூர் தேசிய நெடுஞ்சாலை என்றால் சரிதான். பேருந்து நிறுத்தம் மற்றும் கடைகள் உள்ளது என்றால் சரிதான். போக்குவரத்து நெரிசல் மிகுந்த பகுதி என்றால் சரிதான். அங்கு போக்குவரத்து சிக்னலுக்காக வண்டி நிற்கும் என்றால் சரிதான். அங்கிருந்த பொதுமக்கள் யாரையும் விசாரித்து சாட்சியாக சேர்க்கவில்லை என்றால் சரியல்ல. சாட்சியாக சேர்த்துள்ளோம். பார்வை மகஜர் சாட்சி உதவி ஆய்வாளர்

கேட்டுக்கொண்டதற்கு இணங்க பார்வை மகஜரில் கையொப்பம் செய்துள்ளார் என்றால் சரியல்ல. ஒப்புதல் வாக்குமூலம் 1ஆம் எதிரியிடமிருந்து பெறவில்லை என்றாலும் அதனடிப்படையில் வழக்கு சொத்து கைப்பற்றப்படவில்லை என்றால் சரியல்ல. கருங்கல் என்பது அனைத்து இடங்களிலும் கிடைக்கும். கருங்கல் சம்பவயிடத்திலிருந்து எடுக்கப்பட்டது என்றால் சரியல்ல. பேருந்தின் கண்ணாடி துண்டுகளை எதிரிகளை கைது செய்வதற்கு முன்பதாகவே உதவி ஆய்வாளர் சம்பவயிடத்திலிருந்து கைப்பற்றியுள்ளார் என்றால் சரியல்ல. சம்பவம் நடந்து 1 மணி நேரம் காலதாமதமாக புகார் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். வழக்கின் அனைத்து சாட்சிகளையும் உதவி ஆய்வாளர் 31-10-2018 அன்று விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார் என்றால் சரிதான். இந்த வழக்கை உதவி ஆய்வாளர் தவறாக தயார் செய்து வைத்திருந்த முதல் தகவல் அறிக்கை அடிப்படையில் ஆய்வாளர் இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றாலும் எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை இல்லை.</u>**

Typed to my dictation and correction
by me in open court read over to the
witness and admitted by him as correct.

Sd/- J.Juliet Pushpa
Principal District and Sessions Judge,
Tiruvallur